Kerala Gazette No. 17 dated 27th April, 2021.
**PART I** **Section iii**

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல்-சி) துறை

## அறிக்கை

எண் 21469/ச. இ. சி. 3/2017/சட்டம். 2018 ஏப்ரல் 7

திருவனந்தபுரம், 1193 மீனம் 24

1940 சைத்ரம் 17.

கேரள மாநில சட்டமன்றப்பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2018 ஏப்ரல் 7-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி,

பி. ஜி. ஹரீந்திரநாத்,
*சட்ட செயலாளர்.*

2018-ன் சட்டம் எண் 13

## 2018-ன் கேரள முதலீடு ஊக்குவித்தல் மற்றும் எளிமைப்படுத்தல் சட்டம்

வெவ்வேறு சட்டங்களின்படி தேவையான பல்வேறு உரிமங்கள், அனுமதி, அங்கீகாரம், தடை நீக்குதல் தொடங்கியவற்றை அளிப்பதற்கான காலதாமதத்தை நீக்குவதற்கான கேரள அரசின் சில பரிந்துரைகளை அமலுக்கு கொண்டுவரவும் அதன் தொடர்பாகவோ அதற்கு தகுந்தாற்போன்றதோ ஆன பிற விஷயங்களுக்காகவும் திருத்தம் செய்வதற்கான ஒரு சட்டம்.

முகவுரை.—வெவ்வேறு சட்டங்களின்படி தேவையான வெவ்வேறு உரிமங்கள், அனுமதி, அங்கீகாரம், தடை நீக்குதல் ஆகியவற்றை அளிப்பதற்கான காலதாமதத்தை தவிர்ப்பதற்கான கேரள அரசின் சில பரிந்துரைகளை அமலுக்கு கொண்டுவரவும் அதனுடன் தொடர்புடையதோ அல்லது அதற்கு தகுந்தாற்போன்றதான மற்ற விஷயங்களுக்காகவும் திருத்தம் செய்வது உகந்ததாக இருப்பதாலும்;

G. 14/2019/DTP/S-24.

இந்தியக்குடியரசின் அறுபத்தி எட்டாம் ஆண்டில் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது.

1. சுருக்கப்பெயரும் தொடக்கமும்.—(1) இந்த சட்டத்தை 2018-ன் கேரள முதலீடு ஊக்குவித்தல் மற்றும் எளிமைப்படுத்தல் சட்டம் என்று அழைக்கப்படலாம்.

(2) இது 2017-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ம் தேதி அமலுக்கு வந்ததாக கருதப்படவேண்டும்.

2. 1960-ன் 34-வது சட்டத்தில் திருத்தம்.—1960-ன் கேரள கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் (1950-ன் 34) சட்டத்தின் பிரிவு 5எ-ல், (4)-ம் துணைப்பிரிவில் 'நிர்ணயம் செய்யப்பட்ட படிவத்தில்' என்ற சொற்களுக்கு முன், 'விண்ணப்பம் கிடைத்த அதே நாளில்' என்ற சொற்கள் சேர்க்கப்படவேண்டும்.

3. 1980-ன் 20-வது சட்டத்தில் திருத்தம்.—1978-ன் கேரள சுமடு தூக்கும் தொழிலாளர்கள் சட்டத்தில் (1980-ன் 20)-ல் பிரிவு 9-க்கு பிறகு பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது,—

"9எ. சுமடு தூக்கும் தொழிலாளர்களின் சேவையை ஏற்படுத்தல்.—(1) இந்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஒரு நிறுவனத்தின் உரிமையாளர் தனது நிறுவனத்துடன் தொடர்புடைய பணிகளுக்கு இந்த சட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ள ஒரு சுமடு தூக்கும் தொழிலாளியை விநியோகிக்கலாம்.

எனில் அதிக கவனத்துடன் செய்ய வேண்டியதும் தனித்திறன் வாய்ந்ததுமான நபர்களின் உதவி தேவையாக வருகின்ற பணிகளுக்கு அல்லது ஏதேனும் இயந்திரத்தின் உதவியுடனோ செய்ய வேண்டிய பணிகள் எனில் அதை அத்தகைய திறனுடைய நபர்களை நியோகித்து செய்யலாம்.

(2) ஒரு நிறுவனத்தின் முதலாளி மற்றும் உரிமையாளர் தலைசுமை தொழிலாளியின் சேவை ஏற்படுத்தியிருந்தால் மட்டுமே, அவர்களுக்கு அரசு அறிக்கை செய்துள்ள ஊதியத்திற்கு தகுதியானவர் ஆவர்"

4. சட்டங்கள் ஏற்படுத்துவதற்கான அதிகாரம்.—(1) அரசாங்கத்திற்கு, அரசிதழ் அறிக்கை வாயிலாக, இந்த சட்டத்தின் தேவைகளை நடைமுறைப்படுத்துவதற்காக, பிற்கால பலனுடனோ அல்லது முற்கால பலனுடனோ சட்டங்கள் உருவாக்கப்படலாம்.

(2) இந்த சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட எந்தவொரு விதியும் அரசு அதை உருவாக்கிய பிறகு, முடிந்த அளவு விரைவில், சட்டப்பேரவை கூட்டத்தொடரில் இருக்கும்போது அதன் முன்பாக, ஒரு கூட்டத்தொடரிலோ தொடர்ந்து வரும் இரண்டு கூட்டத்தொடரிலோ உட்படலாம் எனும், மொத்தம் பதினான்கு நாட்களுக்கு வைக்க வேண்டியதும், அவ்வாறு அது எந்த கூட்டத் தொடரில் வைக்கப்படுகிறதோ அந்த கூட்டமோ அல்லது தொடர்ந்து வரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்பு சட்டப்பேரவை மேற்கூறிய சட்டத்தில் ஏதேனும் வடிவ மாற்றம் ஏற்படுத்தவோ அல்லது அந்த சட்டம் உருவாக்க தேவையில்லை என்று தீர்மானிக்கவோ செய்யும் பக்ஷம், இந்த சட்டத்திற்கு அதற்கு பிறகு அதது சங்கதிபோல அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட

வடிவில் மட்டுமே அமலில் இருக்கவோ அல்லது அமலில் இல்லாமல் இருக்கவோ செய்வதும் ஆகும். எனினும் அத்தகைய ஏதேனும் உருமாற்றமோ, இரத்தாக்கலோ அந்த சட்டத்தின்படி முன்பு செய்துள்ள ஏதேனும் காரியத்தின் செல்லுபடியாதலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் இருக்க வேண்டும்.

5. இரத்தாதலும் தவிர்த்தலும்.—(1) 2018-ன் கேரள முதலீடு ஊக்குவித்தல் மற்றும் எளிமைப்படுத்துதல் அவசரச்சட்டம் (2018-ன் 8) இதனால் இரத்து செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு இரத்து செய்யப்பட்ட போதிலும் மேறற்கூறிய அவசரச்சட்டத்தின்படி திருத்தம் செய்யப்பட்ட 1960-ன் கேரள கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் சட்டம் (1960-ன் 34) 1978-ன் கேரள தலை சுமை தொழிலாளி சட்டம் (1980-ன் 20) ஆகிய சட்டங்களின்கீழ் செய்ததாகவோ செய்ததாக கருதப்படுவதான ஏதேனும் காரியம் மற்றும் எடுத்ததோ எடுத்ததாக கருதப்படும் ஏதேனும் நடவடிக்கையோ, இந்த சட்டத்தின்படி திருத்தம் செய்யப்பட்ட மேற்குறிப்பிட்ட சட்டங்களின்கீழ் செய்ததாகவோ அல்லது எடுத்ததாகவோ கருதப்பட வேண்டும்.